நாள்-09.03.2022
Case No.OS.59/2015
PW.1-காந்திமதிநாதன்–பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் ஆவணம் மண்ணு மற்றும் அவரது தந்தை, சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் ராஜாபாதர், விஸ்வநாதஆச்சாரி ஆகியோரிடமிருந்து 6.11.2002 தேதியிட்ட 1 ஏக்கர் 18 சென்டிற்கான கிரைய பத்திரத்தின் அசல் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரைய ஆவணத்தில் குடும்பத்தி்ன் முழு வருவாயை கொண்டு குடும்ப தலைவர் என்ற முறையில் கோபால் என்பவரின் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் கோபாலுக்கு 3 ஆண்மகன்கள் மற்றும் நேரடி வாரிசு என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் கோபால் என்பவருடையது என்பதால் பூர்வீக சொத்துக்கள் என்றுதான் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 1987ல் தான் பாகம் ஏற்பட்டுள்ளது என்றும் 40 வருடங்களுக்கு முன்பாக பாகம் ஏற்பட்டது என சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்தின் 'A' அட்டவணை சொத்தானது கோபாலுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலேயே மேற்படி சொத்து அனுபவித்து வந்து அவருக்கு பின்னிட்டு அவரது மகன் அடையவேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விவரங்களை தெரிந்துதான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி விவரங்களை தாவாவில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சுமதிக்கு வயது சுமார் 22 இருக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாவில் 4ம் பிரதிவாதியின் வயது 48 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த விவரத்தை 3ம் பிரதிவாதிதான் எழுதி கொடுத்தார். அவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அப்படியென்றால் 1976ல் 4ம் பிரதிவாதிக்கு 3 வயது என்று சொன்னால் சரிதான். நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள வயது 4ம்

பிரதிவாதியின் வயது தவறு. அவரின் சரியான வயது எனக்கு தெரியாது. மண்ணு 4ம் பிரதிவாதியைதான் திருமணம் செய்துள்ளார் என்றும் அவருக்கு 5ம் பிரதிவாதிதான் வாரிசு என்றும் , நானும், 3ம் பிரதிவாதியும் வாரிசு அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் அதை தனது வாரிசுகளுக்கு செட்டில்மென்ட் எழுதி உரிமையுண்டு என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் தவறானது என்று சொன்னால் சரியல்ல. உண்மையை மறைக்கவேண்டும் என்ற எண்ணத்தில 4ம் பிரதிவாதியின் வயதை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி மட்டும் தான் 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான மனைவி என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சொத்துக்களை அனுபவிக்கவேண்டும் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.